# தமிழ்நாட்டைப் புறக்கணிக்கின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசை, தமிழ்நாடு புறக்கணிக்க வேண்டும்:

# அ.தி.மு.க.வின் ஒவ்வொரு ஓட்டும், பா.ஜ.க.வுக்கு விழும் ஓட்டு என்பதில், நீங்கள் எச்சரிக்கையாக இருந்து, உதயசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும்!

## தியாகராயர் நகரில், கழக வேட்பாளர் ராஜா அன்பழகனை ஆதரித்து
## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

சென்னை,ஏப்.12–

**சென்னை தியாகராயர் நகரில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ராஜா அன்பழகன் அவர்களுக்கு, உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், `` `தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. இப்படி, தமிழ்நாடு தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தமிழ்நாடு புறக்கணித்து விரட்டி அடிக்க வேண்டும். அ.தி.மு.க.விற்கு விழுகின்ற ஒவ்வொரு ஓட்டும் பா.ஜ.க. சங்கிகள் கூட்டத்திற்கு விழுகின்ற ஓட்டு என்பதில் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

கடந்த 11 நாட்களாக, நான் நேரடியாகச் சென்று நம் வெற்றி வேட்பாளர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலும், நம் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்கு நம் வெற்றிக் கூட்டணிச் சின்னத்திலும் வாக்களிக்கக் கோரிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு இருக்கிறேன். தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்ததனால் தொண்டை பாதிக்கப்பட்டுவிட்டது.

### உதயசூரியன் சின்னம்

தலைவர் எனக்கு ஒரு பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ``நீ சென்று தியாகராய நகரில் பிரச்சாரம் செய், ராஜா அன்பழகனை வெற்றி பெற வைக்க வேண்டும், அங்கு சென்று உதயசூரியன் சின்னத்தில் வாக்குக் கேள்" என்று தலைவர் அனுப்பி வைத்து, நான் இங்கு வந்திருக்கிறேன். ஆனால், இங்கு வந்து பார்த்த பின்புதான் தெரிகிறது, உங்கள் எழுச்சியையெல்லாம் பார்க்கும்போது ஏற்கனவே வெற்றி உறுதி செய்யப்பட்ட ஒன்று. உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, கடந்த முறை கிடைத்த வெற்றி போன்று இருக்கக்கூடாது. குறைந்தபட்சம் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் சகோதரர் ராஜா அன்பழகனை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நான், சகோதரர் ராஜாவைப் பற்றி உங்களிடம் அதிகம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அறிமுகம் தேவையில்லை. அவர் பாரம்பரியமான தி.மு.கழகக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தத் தியாகராய நகரில் தொடக்க காலத்திலிருந்தே கழகப் பணி என்றால் அவரின் குடும்பம்தான் நம்பர் ஒன் குடும்பம். இந்தப் பகுதியில் எல்லாராலும் மதிக்கப்படுகின்ற, நம்பப்படுகின்ற ஒரு குடும்பம் நம் ராஜாவின் குடும்பம். அவரின் தந்தை, என் அண்ணன், மதிப்புக்குரிய ஜெ.அன்பழகன் அவர்கள், தன் கடைசிமூச்சு வரைக்கும் மக்களுக்காகவே வாழ்ந்தார். மக்கள் பணியாற்றித்தான் அவர் மக்கள் பணிக்காகவே தன்னுடைய உயிரைத் துறந்தார்.

### சிறப்பாகச் செயல்படுபவர்

அவர் இந்தத் தியாகராய நகரிலும் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியிலும் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவர் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இப்போது நான் இருக்கிறேன். அதே போன்று, இந்தத் தியாகராய நகர் தொகுதியில் ஜெ.அன்பழகனின் மகன், என் சகோதரர் ராஜா அன்பழகனை நம் தலைவர் உங்களிடம் ஒப்படைத்திருக்கிறார். இதில் எனக்குக் கூடுதல் பெருமை என்னவென்றால், இளைஞர் அணிச் செயலாளர் என்ற முறையில், என் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகச் சிறப்பாகச் செயல்படுபவர்தான் நம் வேட்பாளர் ராஜா அன்பழகன்.

நானும் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். அருகில் இருக்கக்கூடிய சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் நானும் போட்டியிடுகிறேன். தலைவர் அவர்கள் எனக்கு இரண்டாவது முறையாக வாய்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். நான் என் தொகுதியில் சென்று ஒரே ஒரு நாள்தான் சென்று வாக்கு கேட்டேன். என் தொகுதியை விட்டுவிட்டு நான் ராஜாவுக்காக இந்தத் தியாகராய நகருக்கு வந்திருக்கிறேன் என்றால் என்ன அர்த்தம்? என் வெற்றியை விட, எனக்கு மிக முக்கியமானது, பெருமை தருவது சகோதரர் ராஜாவின் வெற்றி. சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதி வெற்றியை விட மிக, மிக முக்கியமானது இந்தத் தியாகராய நகர் தொகுதியின் வெற்றி.

இந்தத் தியாகராய நகர் என்றைக்குமே ஜெ.அன்பழகனின் கோட்டை, தி.மு.கவின் கோட்டை என்பதை இந்த முறை நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள். பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில், நான் சொன்னது குறைந்தபட்சம் 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் ராஜா அன்பழகன் அவர்களை நீங்கள் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

### 5 ஆண்டுகளில் பல்வேறு பணிகள்

இன்றைக்குத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு



தொகுதியாகச் சென்று வாக்குக் கேட்கிறார். நானும் ஒவ்வொரு தொகுதியாக சட்டமன்ற வேட்பாளரை அழைத்துச் சென்று வாக்குக் கேட்கிறேன். நான் மக்களைச் சந்திக்கிறேன்; என்ன தைரியத்தில் சென்று சந்திக்கிறோம் என்றால், இந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு பணிகளைச் செய்திருக்கிறோம். குறிப்பாக, தியாகராய நகரில் உஸ்மான் சாலை மற்றும் சி.ஐ.டி. நகர் சாலையை இணைக்கும் வகையில், மேம்பாலம் கட்டப்பட்டு, இன்றைக்குப் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திருக்கிறோம் என்றால், அது நம் தலைவர், திராவிட மாடல் அரசு கொண்டு வந்த திட்டம்.

### தியாகராயர் நகர் திட்டங்கள்

சி.ஐ.டி. நகரில் புதிய நூலகம் கட்டப்பட்டிருக்கிறது நம் முதலமைச்சர் கொடுத்தது.

ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சி.ஐ.டி. நகர் மாநகராட்சிப் பள்ளிக்கு இன்றைக்குக் கூடுதல் வகுப்பறைகளை நாம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கண்ணம்மாபேட்டைப் பகுதியின் கழிவுநீர்ப் பிரச்சினையைச் சரிசெய்ய இன்றைக்குப் புதிய கழிவுநீர் இறைப்பு நிலையம் (பம்பிங் ஸ்டேசன்) அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

கார்ப்பரேஷன் குடியிருப்பு, தண்டபாணித் தெருவில் இருக்கக்கூடிய பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. ஐந்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் வடபழனி




நூறடிச் சாலையில் புதிய செயற்கை நீரூற்றுடன் கூடிய ஒரு பூங்கா அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

மாம்பலம் இரயில் நிலையம் முதல் தியாகராய நகர் பேருந்து நிலையம் வரை நடைமேம்பால வசதி அமைத்துக் கொடுத்தது நம் திராவிட மாடல் அரசு. கோடம்பாக்கம் புலியூர் கால்வாய் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்கு மாம்பலம், வடமதுரை கண்ணன் கோயில், வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோவிலின் குடமுழுக்குப் பணிகள் நம் தலைவர் ஆட்சியில் நடைபெற்றுள்ளன.

வடபழனியில் பன்னடுக்குப் பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகள், தியாகராய நகர் பேருந்து நிலையத்தில் பன்னடுக்கு வணிக வளாகம் அமைக்கும் பணி, கோடம்பாக்கத்தில் மேம்படுத்தப்பட்ட மகப்பேறு மருத்துவமனை, தியாகராய நகர் தீயணைப்பு நிலையத்துக்குப் புதிய கட்டடங்கள், வடபழனியில் விளையாட்டுத் திடல் மற்றும் சிறுவர் பூங்கா என இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்திட, ராஜாவுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள், மீண்டும் தி.மு.கவுக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று உறுதியோடும் உரிமையோடும் உங்களையெல்லாம் கேட்க வந்திருக்கிறேன். இதுமட்டுமல்ல, பல்வேறு திட்டங்களைச் செய்து கொடுத்துள்ளோம்.

### தலைவரின் முதல் வாக்குறுதி

கடந்த முறை ஆட்சிக்கு வருவதற்கு முன்பு நம் தலைவர் சொன்ன முதல் வாக்குறுதி. பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். நம் தலைவர் முதலமைச்சரான உடனேயே போட்ட முதல் கையெழுத்துப் பெண்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து திட்டம், 'மகளிர் விடியல் பயணம்' திட்டம்.

`கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்'. இன்று ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் உரிமைத் தொகை திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்.

இந்த உரிமைத் தொகை திட்டத்தை எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் திட்டம் போட்டார்கள். தேர்தலைக் காரணங்காட்டி மூன்று மாதம் நிறுத்த வேண்டும் என்று நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார். ``நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நிறுத்துகிறாயா? நான் 5,000 ரூபாய் கொடுக்கிறேன்" என்று பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் மூன்று மாதத்துக்குச் சேர்த்து 3,000, கோடைக் கால சிறப்பு நிதி 2,000 என்று 5,000 ரூபாயை நம் தலைவர் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஒரே தவணையில் கொடுத்தார்.

முதலமைச்சர் காலையில் ஆறரை மணிக்கு மகளிரின் வங்கிக் கணக்கில் பணத்தை அனுப்பினார். ஒன்பது மணிக்கு நீங்கள் வங்கிக்குச் சென்று பணத்தை எடுத்துவிட்டீர்கள். ஏன்? மோடி இந்தப் பணத்தையும் எடுத்துவிடுவார், வங்கியில் குறைந்தபட்ச இருப்பு இல்லை என்று சொல்லி எடுத்துவிடுவாரோ என்ற அந்தப் பயத்தில் பணத்தை எடுத்துவிட்டீர்கள். அவ்வளவு விழிப்புணர்வுடன் நம் மகளிர் இருக்கிறார்கள். இதே விழிப்புணர்வுடன் வருகின்ற 23 ஆம் தேதி நாம் செய்து காட்ட வேண்டும்.

### புதிய வாக்குறுதிகள்

**இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கின்றார்.**

**திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை, 1,000 இல்லை, ஆட்சி அமைந்த உடனே 2000ஆக உயர்த்தித் தருவோம்.**

**காலை உணவுத் திட்டம், ஐந்தாம் வகுப்பு வரைக்கும் இல்லை, எட்டாம் வகுப்பு வரைக்கும் விரிவுபடுத்தப்படும்.**

**கல்வி உதவித் தொகை: 1,000 இல்லை, 1,500ஆக உயர்த்தித் தரப்படும்.**

**முதியோர் உதவித்தொகை: 1,200 இல்லை, 2,000ஆக உயர்த்தித் தரப்படும்.**

**அடுத்த 5 ஆண்டுகளில் 35 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி இலவசமாக வழங்கப்படும்.**

**மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 5 லட்சம் வரைக்கும் எந்தவிதப் பிணையும் இல்லாமல் கடன் கொடுக்கப்படும்.**

### ரூ.8,000 மதிப்புள்ள கூப்பன்

முக்கியமான வாக்குறுதிகளைச் சொல்லியிருக்கிறோம். ஆட்சி அமைந்த உடனே எல்லா மகளிருக்கும் நம் முதலமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன் தருவார்கள். அந்த கூப்பனை வைத்து மகளிர் அவர்கள் வீட்டிற்கு என்ன தேவை என்பதை அவர்களே முடிவு செய்து பிரிட்ஜ், மிக்ஸி, குக்கர், டிவி, ஏசி என எதுவாக இருந்தாலும் மகளிரின் விருப்பம். அதை நீங்களே முடிவு செய்து நீங்களே வாங்கிக்கொள்ளலாம் என்று நம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.



திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப் போவது உறுதி. நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது ராஜா அன்பழன் அவர்களை அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

### முரட்டு அடிமை பழனிசாமி

எடப்பாடி பழனிசாமி அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் இதுவரைக்கும் முரட்டுத் தொண்டர்களைப் பார்த்திருப்பார்கள். முரட்டு பக்தர்களைப் பார்த்திருப்பார்கள். ஆனால், உங்களை மாதிரி ஒரு முரட்டு அடிமையை பார்த்ததே இல்லை. நீங்கள் மோடி அவர்களுக்கு ரொம்ப முரட்டு அடிமையாக இருக்கிறீர்கள். அவர் என்ன சொன்னாலும் கேட்கின்றீர்கள். தமிழ்நாட்டு மக்கள் குறித்து சிந்தித்துப் பாருங்கள்.

நம்முடைய மாநிலத்திற்கு உரிய நிதிகளைப் பெற்றுக் கொடுங்கள். மாநில உரிமைகளுக்கெல்லாம் குரல் கொடுங்கள். இவ்வளவு பெரிய அடிமையாக இருக்காதீர்கள். இவ்வளவுதான் சென்னேன். உடனே என்ன சொல்லி விட்டார்.

உதயநிதிக்கு எந்த அனுபவமும் கிடையாது. அவருக்கு என்ன அனுபவம் இருக்கின்றது. என்னுடைய அரசியல் வயது, அவர் வயது என்று சொன்னர். உண்மைதான். அவருக்கு இருக்கக்கூடிய அனுபவம் எனக்கு நிச்சயம் கிடையவே கிடையாது.

### காலைத்தானே வாரிவிட்டீர்கள்

போட்டோவை காண்பித்து, இந்த அனுபவம் எனக்கு கிடையாது. நிச்சயம் கிடையாது. கீழே ஒருவர் படுத்து இருக்கின்றார். நீங்கள் கார்பெட் என்று நினைச்சுகாதீர்கள். இப்படி காலைப்பிடித்துத்தான் முதலமைச்சர் ஆனார். இந்த அனுபவம் எனக்கு கிடையாது. சங்கிக் கூட்டத்தின் காலைப் பிடிக்கும் அனுபவம் எனக்கு கிடையாது. நான் என்றைக்கும் மக்களுடன் மக்களாக நின்று மாநில உரிமைக்கு குரல் கொடுப்பவன்தான் இந்த உதயநிதி. இதைத்தான் சொன்னேன். இதற்கு என்ன சொன்னார் தெரியுமா? `ஒருவர் காலில் விழுவது தப்பா...? அந்தப் பண்பாடு கூட உனக்குக் கிடையாதா? தெரியாதா' என்கின்றார். நான் கேட்கின்றேன். அந்தம்மா காலில் விழுந்தீர்களே. அந்த அம்மா காலைத்தானே வாரிவிட்டீர்கள். `நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்' என்று அந்தம்மாவைப் பார்த்து கேட்டார். அந்த அனுபவம் எனக்குக் கிடையாது. இதைத்தான் நான் சொன்னேன்.

இப்ப என்ன தெரியுமா சொல்லிவிட்டார். `உதயநிதி பால்டாயில் குடித்து என்றைக்கோ செத்துப் போயிருக்க வேண்டும். இங்க இருந்து என்னோட உயிரை வாங்குகிறான்' என்று சொல்லிவிட்டார். என்னை ரொம்ப திட்டுகின்றார். விட்டால், ஆள் வைத்தே அடிப்பார் போல இருக்கின்றது. இன்னும் கெட்டவார்த்தை மட்டும்தான் பயன்படுத்தவில்லை. அதற்கும் துணிந்து விடுவார்.

### பால்டாயில் பழனிசாமி

நான் ஒன்றே ஒன்றுதான் கேட்கின்றேன். பால்டாயில், பால்டாயில்ன்னு கூப்பிடுகின்றார். தேர்தல் முடிவு இப்பவே அவரது கண்ணிற்குத் தெரிந்து விட்டது போல இருக்கிறது. இதுவரைக்கும் அவரை என்னவென்று கூப்பிட்டுக் கொண்டிருந்தோம். பாதம் தாங்கி பழனிசாமின்னு. இனிமேல் அவர் பாதம் தாங்கி பழனிச்சாமி இல்லை. அவர் பால்டாயில் பழனிசாமி. இனிமேல் அவரை அப்படித்தான் கூப்பிட வேண்டும். எல்லா கூட்டத்திலும் பால்டாயில் சாப்பிட்டு செத்துப்போயிருப்பான் என்று பேசுகின்றார்.

அரசியலில் வெற்றி, தோல்வி சகஜம். பால்டாயில் பழனிசாமி அவர்களே, உங்களுக்கு ரொம்ப, ரொம்ப சகஜம். ஆகவே நீங்கள் எந்த தப்பான முடிவையும் எடுத்து விடக் கூடாது. நீங்கள் எப்பவுமே நல்ல உடல் நலத்தோடு, ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். எங்கள் தலைவர் 2.0 ஆட்சியில் செய்யும் சாதனைகளை நீங்கள் பார்க்க வேண்டும். அ.தி.மு.கவின் நிரந்தர பொதுச்செயலாளராக நீங்கள்தான் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எங்களுக்கு வசதியாக இருக்கும்.

செய்து காட்டுவோமா? நம்முடைய தலைவர் மீண்டும், மீண்டும் சொல்கின்றார். இந்த சட்டமன்ற தேர்தல் டெல்லி அணியா, தமிழ்நாடு அணியா என்று பார்த்து விடுவோம் என்று கேட்கின்றார். தமிழ்நாடு அணி நாம் ஜெயித்து காட்ட வேண்டும்.

டெல்லி அணி என்று சொல்கின்றோமே ஏன்? மோடி, மோடிக்குப் பின்னால் ஒளிந்திருப்பது நம்பர் ஒன் முரட்டு அடிமை பால்டாயில் பழனிச்சாமி.

நாம் இவ்வளவு திட்டங்கள் செய்திருக்கிறோமே, இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறோமே, ஒன்றிய அரசு, ஒன்றிய பா.ஜ.க அரசு நமக்குத் துணையாக நிற்கிறதா? நமக்கான திட்டங்களைக் கொடுக்கிறார்களா? நமக்கு ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று எந்தத் திட்டமும் கிடையாது. `தமிழ்நாடு' என்கிற பெயரே பட்ஜெட்டில் இல்லை. இப்படித் தமிழ்நாடு தொடர்ந்து ஒன்றிய பா.ஜ.க அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டைப் புறக்கணிக்கிற ஒன்றிய பா.ஜ.க. அரசைத் தமிழ்நாடு புறக்கணித்து விரட்டி அடிக்க வேண்டும். அ.தி.மு.க.விற்கு விழுகின்ற ஒவ்வொரு ஓட்டும் பா.ஜ.க. சங்கிகள் கூட்டத்திற்கு விழுகின்ற ஓட்டு என்பதில் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் அத்தனை பேரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நீங்கள் முடிவு செய்துவிட்டது மட்டும் போதாது. அடுத்த 14 நாட்கள் களத்தில் நீங்கள் இறங்கிப் பிரச்சாரத்தை செய்யவேண்டும். 5 ஆண்டுகளில் என்னென்ன திட்டங்களை கொண்டு வந்தோம். அடுத்து ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை செய்வோம் என்பதை மக்களிடம் எடுத்துக் கூறுங்கள்.

### திராவிட மாடல் 2.0 ஆட்சி

மீண்டும் அ.தி.மு.க - பா.ஜ.க அடிமைக் கூட்டணி தமிழ்நாட்டுக்குள் நுழைந்துவிட்டது என்றால் தமிழ்நாட்டை எவ்வளவு பின்னோக்கி இழுத்து சென்றுவிடுவர்கள் என்று நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும். ராஜா அன்பழகன் அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் ஜெயிக்க வைத்தீர்கள் என்றால், மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப்போவது உறுதி. அதை தியாகராய நகரில் நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துச் சகோதரர் ராஜா அன்பழகன் அவர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.